# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்! ஆங்கில நாளேடுகள் படம்பிடிப்பு!


THE HINDU

thehindu.com

BJP, AIADMK plan to delete voters' names through SIR: Tamil Nadu CM Stalin

Mr. Stalin called upon DMK party members to closely monitor the proposed SIR. The party will pursue legal means if the ECI decides to go ahead with the SIR, he said.

Updated - October 27, 2025 01:21 pm IST - CHENNAI

THE HINDU BUREAU

THE TIMES OF INDIA

AIADMK, BJP back SIR; say Stalin politicizing it

CITY

28th October, 25 00:13 IST

TOI

Chennai: A day after the ruling DMK vowed to oppose Special Intensive Revision (SIR) in Tamil Nadu, the principal opposition, AIADMK and the state unit of its ally BJP said they welcomed the exercise.

AIADMK organizational secretary D Jayakumar said on Monday the SIR was intended to 'clean the state's electoral rolls.

economictimes.com

POLITICS

BJP-AIADMK planning electoral win thru SIR, won''t fructify: M K Stalin

M K Stalin

Synopsis

Tamil Nadu Chief Minister M.K. Stalin accused the BJP-AIADMK combine of attempting to win elections by disenfranchising voters through the Special Intensive Revision (SIR) of electoral rolls. He warned that this tactic, which allegedly led to 65 lakh people losing voting rights in Bihar, would fail in Tamil Nadu. Stalin asserted the DMK would legally counter any undemocratic measures.

ECONOMIC TIMES.COM

newindianexpress.com

SIR will be NDA's miscalculation: CM Stalin

Stalin said the DMK had already urged the ECI to reconsider the SIR and that the DMK has the strength to face any of their 'anti-democratic' activities.

Express News Service

Updated: 27th Oct, 2025 at 7:48 AM

THE NEW INDIAN EXPRESS

### விருதுநகர் மாவட்டக் கழகம் சார்பில்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கே,கே,எஸ்,எஸ்,ஆர். இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர்,அக்.29-

விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருதுநகர் திருச்சுழி அருகில் உள்ள கானா விளக்கில் நாளை (30.10.2025-வியாழக்கிழமை), காலை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குரு பூஜை விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில் விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி மற்றும் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைச் செயலாளர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள் என அனைவரும் பங்கேற்ற வகையில் இரு வண்ணக் கொடி ஏந்தி விண்ணை முட்டும் அளவிற்கு முதல்வரை வரவேற்று ஓசைகள் எழுப்பி சிறப்பான வரவேற்பு அளித்திட வேண்டும். இவ்வாறு தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சீமான் சன்.சுப்பையா சகோதரர் ச.மணிமுரசு என்ற சீமான் முரசு இ.திவ்யா ஆகியோரது திருமணத்தில் மணமக்களை அமைச்சர்கள் கே ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மருதுஅழகுராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., எஸ்.மாரியப்பன் கென்னடி மற்றும் கழக நிர்வாகிகள் வாழ்த்தினார்கள்.





கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுக்கு இணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்டம் திருமங்கலம் தொகுதி முழுவதும் 1.50 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவின் தொடர்ச்சியாக கள்ளிக்குடி வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கூடக்கோவில், மேல உப்புளிகுண்டு, கிருஷ்ணாபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பத்தாயிரம் குடும்ப அட்டைதாரர்களுக்கு தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் டிஸ்கோ அலாவுதீன் கழக நிர்வாகிகள் மதன்குமார், முத்துராமன், ரம்யா முத்துக்குமார், விமல், ஆதவன் அதியமான் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் பயனாளிகள் பங்கேற்றனர்.



வேலூர் மாநகராட்சி கன்சால்பேட்டையில் தொடர் மழையால் தேங்கியுள்ள மழை நீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றப் படுவதை மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர், பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன் வட்டாட்சியர் வடிவேல் மற்றும் துணை சார்ந்த அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.